Original Suit No.3/2009 நாள்: 07.07.2022

**பி.வா.சா.1ன் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் வழக்கின் 31ம்பிரதிவாதி. 32 முதல் 37 பிரதிவாதிகளுக்காகவும் நான் சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்களை நான் சொல்லி அதனை மற்றொரு வழக்கறிஞர் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 23.08.2016ம் தேதியிட்ட முஸ்தாக் அலி, அன்வர் அலி, முகமது அலி மற்றும் சௌக்கத் அலி ஆகியோர் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 23.08.2017ம் தேதியிட்ட 34ம்பிரதிவாதி அரவது வகையறாவுடன் செய்து கொண்ட பாகப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் |

தாவாவில் கோரியுள்ள படி தீர்ப்பாணை வழங்கும்படியும், தாவாவில் எங்களுக்குள்ளான பாகத்தை ஒதுக்கீடு செய்து தீர்ப்பாணை வழங்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது நான் மற்றும் 32, 33ம்பிரதிவாதிகள் மற்றும் ஒரு முகமது அலி ஆகியோர்கள் தாவா சொத்தில் ஓர் பகுதியை வாதியிடம் இருந்து கிரையம் பெற்றோம். ஆகவே நான் கிரையம் பெற்ற சொத்துக்களை தனி தனியாக பிரித்து முதல் நிலை தீர்ப்பாணை வழங்குவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு

அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்துசெய்தார்.
(ஒம்/– R.கோகுல் முருகன்),
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.